3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8696/2016/இ1)

| | | |
|---|---|---|
| 03.01.2020 | **426.** தஞ்சாவூர் மாநகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2019–20ன் கீழ் தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3, நாள்:03.09.2019–ன்படி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி 2019–20ன் கீழ் மதிப்பீடு ரூ.500.00 இலட்சத்திற்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (TURIP Grant – 1.00 + SFC/CFC/Land Regularisation Grant – 3.00+ ULB Contribution 1.00 Crore).<br>மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.25039–6/2019/DO2, நாள்.18.10.2019ன்படி 4 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் எண்.2–க்கு கீழ்கண்டவாறு தார் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.125.00 இலட்சத்திற்கு 28.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | **<u>சிப்பம் எண். 2 :</u>**<br>RESTORATION OF B.T. (UGD) ROADS AT PADAIVETTI AMMAN KOIL STREET AND CROSS STREET, KONDIRAJA PALAYAM STREET, VP KOIL STREET, GANDHIPURAM, MURUGAN COLONY, SEVAPPANAYAKAN VARI EAST BANK AND CROSS STREET, THIKKAL STREET, THOPIL PILLAIYAR KOIL STREET, NANAYAKARA CHETTI STREET AND ELLAIYAMMAN KOIL STREET IN (WARD NO. 14,15,16,19, 21, 22, 23 & 24) THANJAVUR CITY MUNICIPAL CORPORATION | M/s. PR Construction, Thanjavur | 1,15,95,147.00 | மதிப்பீட்டு தொகையை விட 7.92% கூடுதல் |
| | | Thiru S.Vaithilingam, Thanjavur | 1,17,84,208.20 | மதிப்பீட்டு தொகையை விட 9.68% கூடுதல் |
| | | M/s. SD Infra, Thiruverumbur | 1,19,74,235.60 | மதிப்பீட்டு தொகையை விட 11.45% கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. PR Construction, Thanjavur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையினை விட 7.92% கூடுதலாக உள்ளதால் விலைக்குறைப்பு செய்து தர கோரியதற்கிணங்க, அந்நிறுவனம் 17.12.2019 அன்று கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி தொகையினை விலைக்குறைப்பு செய்து வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | **<u>சிப்பம் எண். 2 :</u>**<br>RESTORATION OF B.T. (UGD) ROADS AT PADAIVETTI AMMAN KOIL STREET AND CROSS STREET, KONDIRAJA PALAYAM STREET, VP KOIL STREET, GANDHIPURAM, MURUGAN COLONY, SEVAPPANAYAKAN VARI EAST BANK AND CROSS STREET, THIKKAL STREET, THOPIL PILLAIYAR KOIL STREET, NANAYAKARA CHETTI STREET AND ELLAIYAMMAN KOIL STREET IN (WARD NO. 14,15,16,19, 21, 22, 23 & 24) THANJAVUR CITY MUNICIPAL CORPORATION | M/s. PR Construction, Thanjavur | 1,12,79,552.60 | மதிப்பீட்டு தொகையை விட 4.98% கூடுதல் |

எனவே திட்டப்பணிகளை குறித்த காலத்தில் முடித்து அரசுக்கு பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரர் வழங்கியுள்ள மதிப்பீட்டு தொகையை விட 4.98% கூடுதலாக வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி 2019–20ன் கீழ் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையைவிட 4.98% கூடுதலாக உள்ள M/s. PR Construction, Thanjavur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை குறித்த காலத்தில் பணி முடித்து அரசுக்கு பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று வழங்க வேண்டிய அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றம் ஏற்கலாம்.

2) மேற்படி டெண்டர் சதவீதம் மாமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் உட்பட்டு வருவதால், அரசு அனுமதித்த தொகையைவிட ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8696/2016/இ1)

---

**03.01.2020**

**427.** தஞ்சாவூர் மாநகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2019–20ன் கீழ் தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3, நாள்:03.09.2019–ன்படி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி 2019–20ன் கீழ் மதிப்பீடு ரூ.500.00 இலட்சத்திற்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (TURIP Grant – 1.00 + SFC/CFC/Land Regularisation Grant – 3.00+ ULB Contribution 1.00 Crore).

மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.25039–6/2019/DO2, நாள்.18.10.2019ன்படி 4 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் எண்.3–க்கு கீழ்கண்டவாறு தார் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.125.00 இலட்சத்திற்கு 28.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | **<u>சிப்பம் எண். 3 :</u>** RESTORATION OF B.T. (UGD) ROADS AT PAMPATTI STREET, KAVASKARA STREET, SIVARAYAR THOTTAM 2$^{ND}$ STREET, VP KOIL SANNATHI STREET, POOKARA VADAKU STREET, THIRUVALLUVAR NAGAR, ANNA COLONY 4$^{TH}$ STEET, POOKARA VASTHA STREET, POOKARA 1$^{ST}$ STREET, MUNIYANDAVAR COLONY OHT BOTHSIDE, MUNIYANDAVAR COLONY MAIN ROAD IN (WARD NO. 27, 34, 43, 44, 45 & 46) THANJAVUR CITY MUNICIPAL CORPORATION | M/s. PR Construction, Thanjavur | **1,15,56,683.92** | மதிப்பீட்டு தொகையை விட 7.68% கூடுதல் |
| | | Thiru S.Vaithilingam, Thanjavur | **1,17,49,862.00** | மதிப்பீட்டு தொகையை விட 9.48% கூடுதல் |
| | | M/s. SD Infra, Thiruverumbur | **1,19,57,421.00** | மதிப்பீட்டு தொகையை விட 11.42% கூடுதல் |

அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. PR Construction, Thanjavur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையினை விட 7.68% கூடுதலாக உள்ளதால் விலைக்குறைப்பு செய்து தர கோரியதற்கிணங்க, அந்நிறுவனம் 17.12.2019 அன்று கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி தொகையினை விலைக்குறைப்பு செய்து வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | **சிப்பம் எண். 3 :** RESTORATION OF B.T. (UGD) ROADS AT PAMPATTI STREET, KAVASKARA STREET, SIVARAYAR THOTTAM 2ND STREET, VP KOIL SANNATHI STREET, POOKARA VADAKU STREET, THIRUVALLUVAR NAGAR, ANNA COLONY 4TH STEET, POOKARA VASTHA STREET, POOKARA 1ST STREET, MUNIYANDAVAR COLONY OHT BOTHSIDE, MUNIYANDAVAR COLONY MAIN ROAD IN (WARD NO. 27, 34, 43, 44, 45 & 46) THANJAVUR CITY MUNICIPAL CORPORATION | M/s. PR Construction, Thanjavur | 1,12,66,700.42 | மதிப்பீட்டு தொகையை விட 4.98% கூடுதல் |

எனவே திட்டப்பணிகளை குறித்த காலத்தில் முடித்து அரசுக்கு பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரர் வழங்கியுள்ள மதிப்பீட்டு தொகையை விட 4.98% கூடுதலாக வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி 2019–20ன் கீழ் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையைவிட 4.98% கூடுதலாக உள்ள M/s. PR Construction, Thanjavur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை குறித்த காலத்தில் பணி முடித்து அரசுக்கு பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று வழங்க வேண்டிய அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றம் ஏற்கலாம்.

2) மேற்படி டெண்டர் சதவீதம் மாமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் உட்பட்டு வருவதால், அரசு அனுமதித்த தொகையைவிட ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8696/2016/இ1)

03.01.2020

**428.** தஞ்சாவூர் மாநகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் **2019–20**ன் கீழ் தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**17349/2019/**இ**3**, நாள்:**03.09.2019–**ன்படி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி **2019–20**ன் கீழ் மதிப்பீடு ரூ.**500.00** இலட்சத்திற்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (TURIP Grant – 1.00 + SFC/CFC/Land Regularisation Grant – 3.00+ ULB Contribution 1.00 Crore).

மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.**25039–6/2019/**DO2, நாள்.**18.10.2019**ன்படி **4** சிப்பங்களாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் எண்.**4–**க்கு கீழ்கண்டவாறு தார் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.**125.00** இலட்சத்திற்கு **28.11.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | **சிப்பம் எண். 4 :** RESTORATION OF B.T. (UGD) ROADS AT ANNA NAGAR 1ST & 3RD STREET, MURUGAN COLONY NAGAR, MUNICIPAL COLONY 6TH, 8TH, 9TH STREET, KANNAN NAGAR 6TH STREET AND AYYANAR KOVIL STREET, ARULANANTHA NAGAR 2ND, 6TH STREET, OUR LADY HOSPITAL ROAD, MULLAI NAGAR IN (WARD NO. 38,39, 41, 42,51) THANJAVUR CITY MUNICIPAL CORPORATION | M/s. PR Construction, Thanjavur | **1,15,62,535.00** | மதிப்பீட்டு தொகையை விட **7.75%** கூடுதல் |
| | | Thiru S.Vaithilingam, Thanjavur | **1,17,95,982.00** | மதிப்பீட்டு தொகையை விட **9.91%** கூடுதல் |
| | | M/s. SD Infra, Thiruverumbur | **1,20,04,665.00** | மதிப்பீட்டு தொகையை விட **11.86%** கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. PR Construction, Thanjavur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையினை விட **7.75%** கூடுதலாக உள்ளதால் விலைக்குறைப்பு செய்து தர கோரியதற்கிணங்க, அந்நிறுவனம் **17.12.2019** அன்று கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி தொகையினை விலைக்குறைப்பு செய்து வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | **சிப்பம் எண். 4 :** RESTORATION OF B.T. (UGD) ROADS AT ANNA NAGAR 1ST & 3RD STREET, MURUGAN COLONY NAGAR, MUNICIPAL COLONY 6TH, 8TH, 9TH STREET, KANNAN NAGAR 6TH STREET AND AYYANAR KOVIL STREET, ARULANANTHA NAGAR | M/s. PR Construction, Thanjavur | **1,12,66,895.00** | மதிப்பீட்டு தொகையை விட **4.98%** கூடுதல் |

அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | $2^{ND}$, $6^{TH}$ STREET, OUR LADY HOSPITAL ROAD, MULLAI NAGAR IN (WARD NO. 38,39, 41, 42,51) THANJAVUR CITY MUNICIPAL CORPORATION | | | |

எனவே திட்டப்பணிகளை குறித்த காலத்தில் முடித்து அரசுக்கு பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரர் வழங்கியுள்ள மதிப்பீட்டு தொகையை விட 4.98% கூடுதலாக வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி 2019–20ன் கீழ் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையைவிட 4.98% கூடுதலாக உள்ள M/s. PR Construction, Thanjavur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை குறித்த காலத்தில் பணி முடித்து அரசுக்கு பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று வழங்க வேண்டிய அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றம் ஏற்கலாம்.
2) மேற்படி டெண்டர் சதவீதம் மாமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் உட்பட்டு வருவதால், அரசு அனுமதித்த தொகையைவிட ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8696/2016/இ1)

| | | | |
|---|---|---|---|
| 03.01.2020 | 429. | இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வகையான திட்டப்பணிகள், பொது நிதி மற்றும் குடிநீர் நிதி பணிகள் தொடர்பான கணினி தட்டச்சு பணிகளை மேற்கொள்ள பொறியியல் பிரிவிற்கு 2 எண்ணிக்கையிலான கணினி இயக்குபவர் மற்றும் தணிக்கை பிரிவிற்கு 1 எண்ணிக்கையிலான கணினி இயக்குபவர் ஆக கூடுதல் 3 எண்ணிக்கையிலான பணியாளர்களையும், பொறியியல் பிரிவில் செயல்பட்டு வரும் 4 மண்டலங்களுக்கும் மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் பணிகளை மேற்பார்வையிட தொழில்நுட்ப உதவி பணிகளை மேற்கொள்ள 5 எண்ணிக்கையிலான தொழில்நுட்ப உதவியாளர்களையும் (ஆக மொத்தம் 8 எண்ணிக்கையிலான பணியாளர்கள்) தனியார் ஒப்பந்ததாரர் / நிறுவனம் மூலம் பணியின் அவசியம் கருதி 01.01.2020 முதல் 31.12.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திக்கொள்ள, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019ல் கண்டுள்ள விலை விகிதத்தின்படி 8 எண்ணிக்கையிலான பல தரப்பட்ட பணியாளர்களுக்கான தலைப்பில் தினக்கூலி அட்டவணையில் கூலி நிர்ணயம் செய்து பணியமர்த்தி கொள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.24.25 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்துநான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது 19.11.2019ம் தேதி முன் அனுமதி பெற்று 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு டி.மனோகர்,<br>தஞ்சாவூர்</td><td>23,98,415.00</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட 0.04% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு ஜி.செந்தில்குமார்,<br>தஞ்சாவூர்</td><td>24,12,650.00</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட 0.55 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) வரிசை எண்.1ல் கண்டுள்ளவாறு மதிப்பீட்டு தொகையை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு டி.மனோகர், தஞ்சாவூர் என்பவரது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.24.25 இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மற்றும் வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.14939/2019/எம்சிஇ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>03.01.2020</td>
<td>430.</td>
<td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்டம் எண்.I வார்டு எண்.1 முதல் 13 வரையிலான வார்டுகளில் அமைந்துள்ள 4 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், 83 சிறு மின்விசை பம்புகள் மற்றும் 15 பவர் பம்புகள் ஆகியவற்றின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், வால்வுகளை இயக்கும் பணி செய்ய ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான ஒப்பந்த காலம் எதிர்வரும் 31.12.2019 அன்று முடிவடைகிறது.<br>
எனவே பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.01.2020 முதல் 31.12.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி குடிநீர் விநியோகம் வால்வுகளை இயக்குதல் பேணுதல் மற்றும் பராமரிப்பு பணிகளையும், அந்தந்த பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு செய்யும் பணிகளையும் மேற்கொள்வதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019ல் கண்டுள்ள விலை விகிதத்தின்படி 8 எண்ணிக்கையிலான பல தரப்பட்ட பணியாளர்களுக்கான தலைப்பில் தினக்கூலி அட்டவணையில் கூலி நிர்ணயம் செய்து பணியமர்த்தி கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.14.70 இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது 19.11.2019ம் தேதி முன் அனுமதி பெற்று 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு டி.மனோகர்,<br>தஞ்சாவூர்</td><td>14,51,240.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு ஜி.செந்தில்குமார்,<br>தஞ்சாவூர்</td><td>14,58,540.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட 0.38 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) வரிசை எண்.1ல் கண்டுள்ளவாறு மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு டி.மனோகர், தஞ்சாவூர் என்பவரது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.14.70 இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மற்றும் வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.14938/2019/எம்சிஇ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>03.01.2020</td>
<td>431.</td>
<td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்டம் எண்.II வார்டு எண்.14 முதல் 26 வரையிலான வார்டுகளில் அமைந்துள்ள 7 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், 89 சிறு மின்விசை பம்புகள் மற்றும் 52 பவர் பம்புகள் ஆகியவற்றின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், வால்வுகளை இயக்கும் பணி செய்ய ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான ஒப்பந்த காலம் எதிர்வரும் 31.12.2019 அன்று முடிவடைகிறது.<br>
எனவே பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.01.2020 முதல் 31.12.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி குடிநீர் விநியோகம் வால்வுகளை இயக்குதல் பேணுதல் மற்றும் பராமரிப்பு பணிகளையும், அந்தந்த பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு செய்யும் பணிகளையும் மேற்கொள்வதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019ல் கண்டுள்ள விலை விகிதத்தின்படி 14 எண்ணிக்கையிலான பல தரப்பட்ட பணியாளர்களுக்கான தலைப்பில் தினக்கூலி அட்டவணையில் கூலி நிர்ணயம் செய்து பணியமர்த்தி கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.25.75 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது 19.11.2019ம் தேதி முன் அனுமதி பெற்று 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு டி.மனோகர், தஞ்சாவூர் | 25,39,670.00 | மதிப்பீட்டு தொகையை விட **0.12**% குறைவு |
| 2. | திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் | 25,52,445.00 | மதிப்பீட்டு தொகையை விட **0.38** % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) வரிசை எண்.1ல் கண்டுள்ளவாறு மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு டி.மனோகர், தஞ்சாவூர் என்பவரது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.25.75 இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி நிர்வாக அனுமதி பெற்று வழங்கப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மற்றும் வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.14937/2019/எம்சிஇ1)

**03.01.2020** **432.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்டம் எண்.III வார்டு எண்.27 முதல் 34 வரை மற்றும் வார்டு எண்.43 முதல் 47 வரையிலான வார்டுகளில் அமைந்துள்ள 3 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், 27 சிறு மின்விசை பம்புகள் மற்றும் 54 பவர் பம்புகள் ஆகியவற்றினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், வால்வுகளை இயக்கும் பணி செய்ய ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான ஒப்பந்த காலம் எதிர்வரும் 31.12.2019 அன்று முடிவடைகிறது.

எனவே பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.01.2020 முதல் 31.12.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி குடிநீர் விநியோகம் வால்வுகளை இயக்குதல் பேணுதல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பராமரிப்பு பணிகளையும், அந்தந்த பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு செய்யும் பணிகளையும் மேற்கொள்வதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019ல் கண்டுள்ள விலை விகிதத்தின்படி 11 எண்ணிக்கையிலான பல தரப்பட்ட பணியாளர்களுக்கான தலைப்பில் தினக்கூலி அட்டவணையில் கூலி நிர்ணயம் செய்து பணியமர்த்தி கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.20.50 இலட்சத்திற்கு (ரூபாய் இருபது இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது 19.11.2019ம் தேதி முன் அனுமதி பெற்று 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு டி.மனோகர், தஞ்சாவூர் | **19,95,455.00** | மதிப்பீட்டு தொகையை விட **0.12**% குறைவு |
| 2. | திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் | **20,03,485.00** | மதிப்பீட்டு தொகையை விட **0.28** % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) வரிசை எண்.1ல் கண்டுள்ளவாறு மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு டி.மனோகர், தஞ்சாவூர் என்பவரது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.**20.50** இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மற்றும் வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை **2019–20** திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.14934/2019/எம்சிஇ1)

**03.01.2020** | **433.**

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்டம் எண்.IV வார்டு எண்.**35, 36, 37, 38, 39, 40, 41, 42, 48, 49, 50** மற்றும் **51** வரையிலான வார்டுகளில் அமைந்துள்ள **97** பவர் பம்புகள் ஆகியவற்றின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், வார்டு எண்கள்.**36, 40, 41**ல் அமைந்துள்ள குடிநீர் விநியோக வால்வுகளை இயக்கவும் அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான ஒப்பந்த காலம் எதிர்வரும் **31.12.2019** அன்று முடிவடைகிறது.

எனவே பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி **01.01.2020** முதல் **31.12.2020** வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணி அமர்த்தி குடிநீர் விநியோகம் வால்வுகளை இயக்குதல் பேணுதல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பராமரிப்பு பணிகளையும், அந்தந்த பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு செய்யும் பணிகளையும் மேற்கொள்வதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் **28.09.2019**ல் கண்டுள்ள விலை நிர்ணய பட்டியலின்படி **13** எண்ணிக்கையிலான பல தரப்பட்ட பணியாளர்களுக்கான தலைப்பில் தினக்கூலி அட்டவணையில் கூலி நிர்ணயம் செய்து பணியமர்த்தி கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**24.00** இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது **19.11.2019**ம் தேதி முன் அனுமதி பெற்று **10.12.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு டி.மனோகர்,<br>தஞ்சாவூர்</td><td>23,58,265.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு ஜி.செந்தில்குமார்,<br>தஞ்சாவூர்</td><td>23,70,127.50</td><td>மதிப்பீட்டு தொகையை விட 0.38 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) வரிசை எண்.1ல் கண்டுள்ளவாறு மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு டி.மனோகர், தஞ்சாவூர் என்பவரது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.24.00 இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி நிர்வாக அனுமதி பெற்று வழங்கப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மற்றும் வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.14936/2019/எம்சிஇ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>03.01.2020</td>
<td>434.</td>
<td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்டம் எண்.IV வார்டு எண்.39, 40, 41, 42 மற்றும் 51 வரையிலான வார்டுகளில் அமைந்துள்ள 6 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு தரைமட்டத்தொட்டி, புதிய வீட்டு வசதி வாரியம் அடுக்குமாடி குடியிருப்புகள் தரைமட்ட தொட்டி, பழைய வீட்டு வசதி வாரிய அடுக்குமாடி குடியிருப்பு மோட்டார்கள் ஆகியவற்றின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளும், அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான ஒப்பந்த காலம் எதிர்வரும் 31.12.2019 அன்று முடிவடைகிறது.<br>
எனவே பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.01.2020 முதல் 31.12.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி குடிநீர் விநியோகம் வால்வுகளை இயக்குதல் பேணுதல் மற்றும் பராமரிப்பு பணிகளையும், அந்தந்த பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு செய்யும் பணிகளையும் மேற்கொள்வதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019ல் கண்டுள்ள விலை விகிதத்தின்படி 12 எண்ணிக்கையிலான பல தரப்பட்ட பணியாளர்களுக்கான தலைப்பில் தினக்கூலி அட்டவணையில் கூலி நிர்ணயம் செய்து பணியமர்த்தி கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.22.10 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது 19.11.2019ம் தேதி முன் அனுமதி பெற்று 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு ஜி.செந்தில்குமார்,<br>தஞ்சாவூர்</td><td>21,77,955.00</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட 0.07% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு டி.ஜெயக்குமார்,<br>தஞ்சாவூர்</td><td>21,90,000.00</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட 0.48 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) வரிசை எண்.1ல் கண்டுள்ளவாறு மதிப்பீட்டு தொகையை விட 0.07% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் என்பவரது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.22.10 இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மற்றும் வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.14935/2019/எம்சிஇ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>03.01.2020</td>
<td>435.</td>
<td>இந்து சமய அறநிலையத்துறை, அருள்மிகு பெருவுடையார் திருக்கோவில் 5.2.2020 அன்று நடைபெற இருக்கும் திருக்குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு கூட்டம் நாள் 22.11.2019ன்படி தஞ்சை பெரிய கோவில் திருக்குடமுழுக்கு விழா சுமார் 20 வருடங்களுக்கு பிறகு 05.02.2020ம் தேதி நடைபெற உள்ளதால், இவ்விழாவிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள், பொது மக்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் வருகை தர உள்ளனர். மேலும் இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பிரதான சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகளில் பொது மக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் சாலைக்குறியீடுகள் (Thermo Plastic Road Marking) அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20,00,000/–ஐ (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.20,00,000/–க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
</td>
<td>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.16646/2019/எம்சிஇ4) | |
| 03.01.2020 | 436. | இந்து சமய அறநிலையத்துறை, அருள்மிகு பெருவுடையார் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு கூட்டம் நாள் 22.11.2019ன்படி தஞ்சை பெரிய கோவில் திருக்குடமுழுக்கு விழா சுமார் 20 வருடங்களுக்கு பிறகு 05.02.2020ம் தேதி நடைபெற உள்ளதால், இவ்விழாவிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள், பொது மக்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் வருகை தர உள்ளனர். மேலும் இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி, சோழன் சிலைக்கு மரத்தாலான படிக்கட்டுகள் மற்றும் தடுப்புகள், மாநகராட்சி அலுவலக கட்டிடங்கள், மேம்பாலம் நீரேற்று நிலையம், ராஜப்பா பூங்கா, பாலங்கள் ஆகியவற்றிற்கு மின் அலங்காரம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.15,00,000/—ஐ (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.15,00,000/—க்கு (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.16647/2019/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 03.01.2020 | 437. | இந்து சமய அறநிலையத்துறை, அருள்மிகு பெருவுடையார் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு கூட்டம் நாள் 22.11.2019ன்படி தஞ்சை பெரிய கோவில் திருக்குடமுழுக்கு விழா சுமார் 20 வருடங்களுக்கு பிறகு 05.02.2020ம் தேதி நடைபெற உள்ளதால், இவ்விழாவிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள், பொது மக்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் வருகை தர உள்ளனர். மேலும் இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தற்காலிக கழிவறை அமைக்கப்படும் பகுதிகளை JCB இயந்திரம் கொண்டு சமன் செய்தல் மற்றும் தற்காலிக கழிவறை அமைக்க பயன்படும் தளவாடப் பொருட்கள் வாங்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,50,000/—ஐ (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,50,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.16648/2019/எம்சிஇ4) | |
| 03.01.2020 | 438. | இம்மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் பணியில் Division-IIக்கு உட்பட்ட வார்டு எண்.14 முதல் 26 வரை உள்ள வார்டுகளில் உள்ள 87 எண்ணிக்கையிலான சிறு மின்விசை மோட்டார்கள் மற்றும் 37 எண்ணிக்கையிலான பவர் மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது தஞ்சை பெருவுடையார் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா 05.02.2020 அன்று நடைபெற இருப்பதை முன்னிட்டு முன்னேற்பாடு நடவடிக்கையாக மேற்படி மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்தை (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.16645/2019/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 03.01.2020 | 439. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.35ல் அமைந்துள்ள நவநீதபுரம் முக்கிய சாலை / இணைப்பு சாலையில் தார் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.16.00 இலட்சத்திற்கு (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 04.12.2019ல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 19.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s. Ugan Construction, Thanjavur.</td><td>13,64,965.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–) 0.08% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு டி.மனோகர், தஞ்சாவூர்</td><td>13,73,470.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 0.54 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Ugan Construction, தஞ்சாவூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.15698/2019/எம்சிஇ4)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>03.01.2020</td>
<td>440.</td>
<td>தஞ்சை அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில் மாமன்னன் இராஜராஜ சோழனால் எழுப்பிக்கப்பட்டதும், 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த உலகப்பிரசித்தி பெற்ற கோயில் என்பதாலும், யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ளதாலும், 22 ஆண்டுகளுக்கு பிறகு வருகின்ற 05.02.2020 அன்று நடைபெறவுள்ள திருக்குடமுழுக்கு திருவிழாவினை காண 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மிக மிக முக்கிய பிரமுகர்கள், முக்கிய பிரமுகர்கள், ஆன்மீக பெரியோர்கள் வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.<br>
